12 JUN 1996

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

*(1995, நவெம்பர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1995, நவெம்பர் மாதம் 24 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 2.10 தபாற் செலவு : ரூபா 2.[illegible]

## 1995, ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

[1995, நவெம்பர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 17/95

### 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டமானது, 1995 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆஆ) என்னும் பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "அலுவலகமுறையிலான வேதனாதிகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அலுவலக முறையிலான வேதனாதிகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :—

(2) அப்பந்தியின் (i) ஆம், உட்பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :—

"(i) திரட்டு நிதியத்திலிருந்து, குடியரசின்கீழ் கொடுப்பனவு பெறும் ஏதேனும் பதவியை வகிக்கும் எவரேனும் தனியாளின் ;".

(3) அப்பந்தியின் (ix) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(x) ஏதேனும் சட்டத்தால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதும் எந்தச் சபையின் அல்லது ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் சனாதிபதியால் அல்லது அமைச்சர் ஒருவரால் நியமிக்கப்படுகிறார்களோ அந்த ஏதேனும் சபையின் அல்லது விசாரணை ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினருக்கு அல்லது ஊழியருக்கு.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் ;

"(அஅ) எந்தப் ஃபிளாக்ஷிப் கம்பனியுடன் இலங்கை முத லீட்டுச் சபையால் உடன்படிக்கையொன்று செய்துகொள்ளப் பட்டுள்ளதோ அந்த ஃபிளாக்ஷிப் கம்பனியால், எந்தக் காலப் பகுதிக்கு, அக்கம்பனியின் இலாபங்களும் வருமானமும் அந்த உடன்படிக்கையின் நியதிகளின்கீழ் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனவோ அந்தக் காலப்பகுதியில் அல்லது அதன் பின்னரான ஓராண்டிற்குள் அத்தகைய கம்பனியில் எவ் விலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக் கப்பட்டுள்ளதோ அவ்விலாபத்திலிருந்தும் வருமானத்திலிருந் தும் எவரேனும் பங்குதாரருக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபமும்.

இப்பந்தியில், "ஃபிளாக்ஷிப் கம்பனி" என்பது 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத் தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ளதும் அத்தகைய உடன்படிக்கைக்கிணங்க, அத்தகைய உடன்படிக்கையில் குறித் துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் கம்பனியால் கொண்டுநடாத் தப்படும் பொறுப்பு முயற்சியின் பாவனைக்கென —

(அ) ஏதேனும் கட்டிடத்தின் கொள்வனவில் அல்லது நிர் மாணத்தில் அல்லது ஏதேனும் காணியின் பொறியின், பொறித்தொகுதியின் அல்லது தளபாடங்களின் கொள் வனவில் அத்துடன் —

(ஆ) பந்தி (அ) என்பதில் உள்ளடக்கப்படாத ஏதேனும் சொத்தின் கொள்வனவில் அல்லது கொள்ளளவில்,

ஐம்பது மில்லியனுக்குக் குறையாத அமெரிக்க ஐக்கிய அர சின் டொலர்களை அல்லது வேறேதும் வெளிநாட்டு நாணயத் தில் அதற்குச் சமமான தொகையை இலங்கையில் முதலீடு செய்துள்ளதுமான ஒரு கம்பனி எனப் பொருள்படும் ;".

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் 17அ ஆம், 18 ஆம் என்னும் இலக்கங்களுக்கும் சொற்களுக்கும் பதிலாக 17அ ஆம், 17ஆ ஆம், 18 ஆம் என்னும் இலக்கங்களையும் சொற்களையும் இதெதன் மூலமும்

4. பிரிவு 17ஓ என்பதை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 17 ஓ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 17 ஓ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

"மேம்பாடடைந்த தொழில் நுட்பவியலைப் பயன்படுத்தும் கம்பனியொன்றினால் கொண்டு நடாத்தப்படும் கைத்தொழிற் பொறுப்பு முயற்சியொன்றின் இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல்.

17. ஓ (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கம்பனியின் 3 ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்தின் விற்பனையிலிருந்தான எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும் தவிர) எந்த வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய கம்பனி, தொழிலைக் கொண்டு நடாத்தத் தொடங்கியதோ அந்த வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள்—

(அ) 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் கூட்டிணைக்கப்பட்டதும் ;

(ஆ) எந்தக் கம்பனிக்கு இப்பிரிவு ஏற்புடைத்தாகின்றதோ அக்கம்பனியொன்றாக அதன் பொருட்டு 1996 செப்ரெம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செய்யப்பட்ட எழுத்திலான விண்ணப்பமொன்றின் மீது 1997 மார்ச் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்குமுன்னர் கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையால் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதும் ;

(இ) மேம்பாடடைந்த தொழில்நுட்பவியலைப் பயன்படுத்தி —

(i) எவையேனும் பொருட்களின் அல்லது வியாபாரப் பொருட்களின் உற்பத்திக்கென அல்லது தயாரிப்புக்கென; அல்லது

(ii) ஏதேனும் சேவையை வழங்குவதற்கென ;

ஏதேனும் கைத்தொழிற் பொறுப்பு முயற்சியைக் கொண்டு நடாத்துவதில் மட்டும் ஈடுபாடுள்ளதும் ;

(ஈ) அது கூட்டிணைக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டாண்டு காலம் முடிவடையுமுன்னர் கம்பனியால் மேற்கொள்ளப்படும் பொறுப்பு முயற்சியின் உபயோகத்திற்கென, ஏதேனும் பொறித்தொகுதியின்; எந்திரத்தின், பொருத்திகளின் அல்லது உபகரணத்தின் கொள்வனவில் பத்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாமல் முதலீடு செய்துள்ளதுமான;

(உ) அது தொழிலைக் கொண்டுநடாத்தத் தொடங்கிய திகதியிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதியைப் பிந்தாத ஒரு திகதியன்று உள்ளவாறு, அத்தகைய கம்பனியின் பணிப்பாளர்களைத் தவிர ஐம்பது ஊழியர்களுக்குக் குறையாதோரை தொழிலுக்கமர்த்துகின்றதும் அத்துடன் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட ஐந்தாண்டுகளைக் கொண்ட காலப்பகுதி முடிவுறும்வரை தொடர்ந்து தொழிலுக்கமர்த்துகின்றதுமானதும் ; அத்துடன்

(ஊ) முன்பிருந்த ஏதேனும் தொழிலைக் கூறுபடுத்துவதன் மூலம், புனரமைப்பதன் மூலம் அல்லது கொள்ளளவின்மூலம் அமைக்கப்படாததுமான

ஏதேனும் கம்பனிக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் (உ) என்னும் உட்பந்தியின் நோக்கத்திற்கு "ஊழியர்" என்னும் சொல் 16 ஈ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டுள்ளது.".

| | |
|---|---|
| முதன்மைச் சட்டவாக்கத்தின் 22உ என்னும் பிரிவைத் திருத்துதல். | **5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22உ என்னும் பிரிவு —**<br>(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "17 ஈ என்னும் பிரிவு அல்லது 20 ஆம் பிரிவு அல்லது 22இ என்னும் பிரிவு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "17ஈ என்னும் பிரிவு, 17ஓ என்னும் பிரிவு அல்லது 20 ஆம் பிரிவு அல்லது 22இ என்னும் பிரிவு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.<br>(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில் "17ஈ, 20" என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக, "17ஈ, 17ஓ, 20" என்னும் இலக்கங்களை இடுவதன் மூலமும் . |
| முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல். | **6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம்** உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "17எ என்னும் பிரிவின்கீழ்" அல்லது 37எ என்னும் பிரிவின்கீழ் அல்லது 22அ என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "17எ என்னும் பிரிவின்கீழ் |

அல்லது 17எ என்னும் பிரிவின்கீழ் அல்லது 17ஒ என்னும் பிரிவின் கீழ் அல்லது 22அ" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (அஅஅஅ) என்னும் பந்தியில் "1992 ஏப்றில் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பாண்டு, தொடர்பில் நாற்பத்திரண்டாயிரம் ரூபா விடுதொகையொன்று அத்துடன்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1992 ஏப்ரில் 1ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1995 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் நாற்பத்திரண்டாயிரம் ரூபா விடுதொகையொன்று" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (அஅஅஅ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(அஅஅஅஅ) 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் அறுபதனாயிரம் ரூபா படியொன்றுடன் ; அத்துடன்.".

(இ) அவ்வுட்பிரிவின் காப்புவாசகத்தில், "(அஅஅ) என்னும் பந்தியில் அல்லது (அஅஅஅ) என்னும் பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(அஅஅ) என்னும் பந்தியில் அல்லது (அஅஅஅ) என்னும் பந்தியில் அல்லது (அஅஅஅஅ) என்னும் பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(அ) அப்பிரிவிற்கான முதலாம் காப்புவாசகத்தில் —

(i) அக்காப்புவாசகத்தின் (ஊ) என்னும் பந்தியில் "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1992 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 1995 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(ii) அக்காப்பு வாசகத்தின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(எ) 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் அறுபதினாயிரம் ரூபா விடுதொகை ;".

(ஆ) அவ்வுட்பிரிவிற்கான இரண்டாம் காப்பு வாசகத்தில் —

(i) அக்காப்புவாசகத்தின் (i) ஆம் உட்பந்தியில், "இருக்குமிடத்து இருபத்தேழாயிரம் ரூபாவுக்கும், அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருக்குமிடத்து இருபத்தேழாயிரம் ரூபாவுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ii) அக்காப்புவாசகத்தின் (ii) ஆம் உட்பந்தியில், "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டொன்றாக இருக்குமிடத்து நாற்பத்திரண்டாயிரம் ரூபாவுக்கு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1992 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 1995 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டொன்றாக இருக்குமிடத்து நாற்பத்திரண்டாயிரம் ரூபாவுக்கு ; அத்துடன்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(iii) அக்காப்புவாசகத்தின் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(iii) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் மதிப்பீட்டாண்டொன்றாக இருக்குமிடத்து அறுபதினாயிரம் ரூபாவுக்கு ;".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில் —

(அ) அக்காப்புவாசகத்தில் (iv) ஆம் உட்பந்தியில் "1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்குமுன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இருபத்தேழாயிரம் ரூபாவையும் ;" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1986 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1992 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இருபத்தேழாயிரம் ரூபாவையும் ;" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அக்காப்புவாசகத்தின் (v) ஆம் உட்பந்தியில் "தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு நாற்பத்திரண்டாயிரம் ரூபாவையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆனால் 1995 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமரிப்பீட்டாண்டிற்கு நாற்பத்திரண்டாயிரம் ரூபாவையும் அத்துடன்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(இ) அக்காப்புவாசகத்தின் (v) ஆம் உட்பந்தியை உடனடுத்து பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :—

"(vi) 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அறுபதினாயிரம் ரூபாவையும் ;".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (vi) ஆம் பந்தியில் "1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11ஈ என்னும் அதுடன்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1988 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1992 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11ஈ என்னும் ; அல்லது" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (vi) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(vii) 1992 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1994 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11உ என்னும் பாகத்தில் ; அல்லது

(viii) 1994 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11ஊ என்னும் பாகத்தில் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32இஇ என்னும் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32இஇ என்னும் பிரிவு, "பதினைந்து சதவீதம் என்ற வீதப்படி வருமானவரி அறவிடற்பாலதாதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"பதினைந்து சதவீதம் என்ற வீதப்படி வருமானவரி அறவிடற்பாலதாதல் வேண்டும் :

ஆயினும், இலங்கையிலுள்ள அத்தகைய ஆள் 11.ஆம் பிரிவின் (அஅ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள் ஒஃப்ஷோர்க்கம்பனியொன்றாகவிருக்குமிடத்து அத்தகைய அரசுரிமை பத்துச் சதவீதப்படி வருமான வரிக்குப் பொறுப்பாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32உஉ என்னும் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32உஉ என்னும் பிரிவு அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பந்தியில் (ii) ஆம் உட்பந்தியில் "1992 ஏப்ரில் 1.ஆம் திகதி அல்லது அதன்பின்னர் ஆனால் 1994 ஏப்ரில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1992 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1993 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியை நீக்கஞ்செய்வதன் மூலமும்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32உஉ என்னும் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 32உஉஉ என்னும் பிரிவு என்றுற் போன்று பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 உஉ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

“1993 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் [illegible] வரிமதிப்பீட்டாண்டிற்கு ஊழிய [illegible] இலாபங்கள்மீது வரிச்செலுத்தலை வரிவரவு.

32உஉஉ. (1) அறுபத்தேழாம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவையுடைத்தாகும் தனியாள் ஒருவர் தவிர்ந்த எந்தத் தனியாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானம் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு ஊழியத்திலிருந்தான வருமானங்களை உள்ளடக்குகின்றதோ அந்தத் தனியாளினால் 1993 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்குச் செலுத்தப்படற்பாலதான வருமானவரியிலிருந்து இப்பிரிவின் பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க நிச்சயிக்கப்படும் ஒரு தொகை கழிக்கப்படுதல் வேண்டும் :—

(அ) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 1993 எப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்தும் அத்துடன் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இலயபான இலாபங்களின் தொகை—

(i) ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவை விஞ்சாதவிடத்து

இருபத்தையாயிரத்து அறுநூற்றி ஐம்பது ரூபா, அல்லது

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இலயபான இலாபங்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமான வரித்தொகை என்பனவற்றுள் எது

குறைவானதோ அதற்குச் சமமான ஒரு தொகை.

(ii) ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து ஆயிரத்து எண்ணூறு ரூபா, அல்லது

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இலயபான இலாபங்களின் அத்தகைய பாகத்திற்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமானவரித்தொகை

என்பனவற்றுள் எது குறைவானதோ அதற்குச் சமமான ஒரு தொகை.

(ஆ) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 1994 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்தும் அத்துடன் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஊழியரின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களின் தொகை —

(i) ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவை விஞ்சாதவிடத்து—

இருபத்தோராயிரத்துத் தொளாயிரத்து ஐம்பது ரூபா, அல்லது

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமானவரித் தொகை என்பவற்றில் எது குறைவானதோ அதற்குச் சமமான ஒரு தொகை ;

(ii) ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்தும் ஆனால் ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் ரூபாவை, விஞ்சாதவிடத்து —

பதினேழாயிரத்து ஒன்பதாயிரத்துப் பத்மவடடு ரூபாவிலிருந்து, ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவின்மேல், அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களின் விஞ்சு தொகையின் முப்பத்திரண்டும் ஐந்தில் நாலு சதவீதத்தால் குறைக்கப்பட்ட தொகை, அல்லது

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமான வரித் தொகை

என்பவற்றுள் எது குறைவானதோ அதற்குச் சமமான தொகை ;

(iii) ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து,

ஆறாயிரம் ரூபா, அல்லது

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத் தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமானவரித் தொகை

என்பவற்றுள் எது குறைவானதோ அதற்குச் சமமான தொகை,

(இ) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்தும் அத்துடன் வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களின் தொகை —

(i) ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவை விஞ்சாதவிடத்து,

பதினையாயிரத்து எழுநூறு ரூபா ; அல்லது

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களுக்கு ஏற்றிக்கூறப்படத்பாலதான வருமான வரித் தொகை

என்பவற்றுள் எது குறைவானதோ அதற்குச் சமமான தொகை ;

(ii) ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்தும் ஆனால் ஒரு இலட்சத்து எழாயிரத்து நானூறு ரூபாவை விஞ்சாதவிடத்து,

பன்னிரண்டாயிரத்து இருநூற்றி நாற்பத்துநாலு ரூபாவிலிருந்து, ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவின் மேல் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களின் விஞ்சுதொகையின் மூப்பத்தைந்து சத வீதத்தால் குறைக்கப்பட்ட தொகை, அல்லது

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத் தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களின் அத்தகைய பாகத்திற்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமானவரியின் தொகை

என்பவற்றுள் எது குறைவானதோ அதற்குச் சமமான தொகை,

(iii) ஒரு இலட்சத்து எழுபதினாயிரத்து நாலாயு ரூபாவை விஞ்சுகின்ற விடத்து —

மூவாயிரம் ரூபா , அல்லது அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தனியாளின் தொழிலிலிருந்து இயைபான இலாபங்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமானவரியின் தொகை

என்பவற்றுள் எது குறைவானதோ அதற்குச் சமமான தொகை,

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்கு —

(அ) எவரேனும் தனியாள் தொடர்பிலும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் "ஊழியத்திலிருந்து இயைபான வருமானங்கள்" என்பது —

(i) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் iv ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட விதத்தில் வரி விதிக்கப்படற்பாலதானவாறான அத்தகைய இலாபங்களின் அத்தகைய பாகம் எதுவுமிருப்பின் அதனதும், அத்துடன்

(ii) 32ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் காப்பு வாசகத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறு 32 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவிற்கிணங்க வருமானவரி அறவிடப்படற்பாலதாகின்றவாறான அத்தகைய இலாபங்களின் அத்தகைய பாகம் எதுவுமிருப்பின் —

அதனதும் கூட்டுத்தொகையை, அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து கிடைத்த இலாபங்களிலிருந்து கழித்த பின்னரான இலாபங்கள் என்று பொருள்படும்.

(ஆ) எவரேனும் தனியாள் தொடர்பிலும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் "ஊழியத்திலிருந்து இலையான இலாபங்களுக்கு ஏற்றக் கூறப்படற்பாலதான வருமான வரித்தொகை" என்பது, அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தனியாளினால் செலுத்தப்படற்பாலதான வரிக்குப் பொறுப்பான அந்தப் பணத்தொகை, அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தனியாளின் ஊழியத்திலிருந்தான இலையபான இலாபங்கள் எந்த விகிதாசாரத்தில் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தனியாளின் இலையபான வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திற்குப் பொறுப்பாகின்றதோ அந்த விகிதாசாரத்தில் பொறுப்பாகும் அந்தப் பணத்தொகை என்று பொருள்படும்.

(இ) எவரேனும் தனியாள் தொடர்பிலும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் "இலையபான வருமான வரி" என்பது இச்சட்டத்தின் இப்பிரிவின் கீழான இலும்சரி, அல்லது வேறு ஏதேனும் பிரிவின் கீழானதாயினும்சரி, ஏதேனும் நிவாரணம் அளிக்குமுன்னரும் அத்துடன் இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i)ஆம் (ii)ஆம் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஊழியத்திலிருந்தான இலாபங்கள் தொடர்பில் அதிலிருந்து வருமான வரியைக் கழித்தபின்னரான அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு, அத்தனியாளினால் செலுத்தப்படற்பாலதான வருமானவரி என்று பொருள்படும்.

(ஈ) எவரேனும் தனியாள் தொடர்பிலும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் "இலையபான வரிமதிப்பிடற்பாலதான வருமானம்" என்பது

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தனியாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்து இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம், (ii)ஆம் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களின் கூட்டுமொத்தத் தொகையைக் கழித்த பின்னரான தொகை அல்லது ;

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அ
தகைய தனியாளின் வழியத்தலிரு
தான இயைபான இலாபங்களுக்கு
சமமான ஒரு தொகை

என்பவற்றுள் —

எந்தத் தொகை குறைவானதோ அந்த
தொகை என்று பொருள்படும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32க என்னும் பிரிவைத் திருத்தல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32க என்னும் பிரிவு இத்தால் பி
வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அ
தகைய பொறுப்பு முயற்சியினால் உற்பத்தி செய்யப்படுவத
கான அல்லது தயாரிக்கப்படுவதற்கான" என்னும் சொற்கள
குப் பதிலாக, "அத்தகைய பொறுப்பு முயற்சியினால் உற்பத்
செய்யப்படுவதற்கான, தயாரிக்கப்படுவதற்கான அல்
சிப்பம் செய்யப்படுவதற்கான" என்னும் சொற்களை இடுவத
மூலமும்;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை
கஞ்செய்து அதற்குப் பதிலாக, பின்வரும் பந்தியை இடுவத
மூலமும் :—

"(அ) எந்தக் காலப்பகுதிக்கு —

(i) ஓராம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட குறித்துரை
கப்பட்ட பொறுப்புமுயற்சியைக் கொண்டுநடாத்
எந்த ஆளின் அல்லது பங்குடைமையொன்றின் எந்
பங்காளரின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமா
தின்மீது இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிண
வருமானவரி அறவிடப்படற்பாலதாகின்றதோ; அல்

(ii) ஓராம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட குறித்துரை
கப்பட்ட எந்தப் பொறுப்பு முயற்சியின் ஏற்றுமதி இ
பங்களும் வருமானமும் 27 ஆம் பிரிவின் (1) ஆம்
பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது செ
துரைக்கப்பட்ட அத்தகைய பொறுப்பு முயற்சி
1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்
முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்
இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்துகொள்
பட்ட உடன்படிக்கையொன்றின் நியதிகளின்படி
யான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனவோ

அக்காலப்பகுதியின்போது செய்யப்பட்டிருந்தால் ஏற்புடை
தாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33அ என்னும் பிரிவைத் திருத்தல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33அ என்னும் பிரிவு அப்பிரி
(2) ஆம் உட்பிரிவின் (i) ஆம் பந்தியில் "பிரிவு 33 (1) இன் கீழ்"
னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "பிரிவு
(1) (அ) இன்கீழ்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவ
மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவு அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில் "பதிவற்றவராகக் கருதப்படுதல் வேண்டும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"வதிவற்றவராகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய தனியாள், 11 ஆம் பிரிவின் (அஅ) என்னும் பந்தியான கருத்தெல்லைக்குள் ஒப்பந்தகாரரான கம்பனியொன்றில் தொழில்புரிபவராக இருக்குமிடத்து, அத்தகைய தனியாள் அவர் இலங்கையில் தொழிலைத் தொடங்கிய திகதியிலிருந்து கணிக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதிக்கு வதிவற்றவராகக் கருதப்படுதல் வேண்டும்."

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவு அப்பிரிவின் (1 அ) என்னும் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அவ்வுட்பிரிவின் (V) ஆம் பந்தியில் "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு நாற்பத்திரண்டாயிரம் ரூபாவையும்;" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1992 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1995 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு நாற்பத்திரண்டாயிரம ரூபாவையும்; அத்துடன்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (V) ஆம் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(vi) 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அறுபதினாயிரம் ரூபாவையும் .".

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 99 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம், இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 99 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) (அ) மாதம் ஒன்றுக்கு ஐயாயிரம் ரூபாவுக்குக் கூடுதலான அல்லது ஆண்டொன்றுக்கு அறுபதினாயிரம் ரூபாவுக்குக் கூடுதலான ஊதியத்தைப் பெறும் தனியாள் ஒருவரை, அல்லது

(ஆ) இலங்கையில் செய்த சேவைகளுக்காக, மாதம் ஒன்றுக்கு எண்பத்தைந்து ரூபாவுக்குக் கூடுதலான அல்லது ஆண்டொன்றுக்கு ஆயிரம் ரூபாவுக்குக் கூடுதலான ஊதியத்தைப் பெறுகின்ற வதிவற்ற ஆளொவரையும் ;

தொழிலுக்கமர்த்தியுள்ளவரும் 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தில் 107இ ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது இச்சட்டத்தின் இந்த அத்தியாயத்தின்கீழ் ஆணையாளர் தலைமை அதிபதிக்கு அறிவித்தல் கொடுத்திராதவருமான தொழில்தருநர் ஒவ்வொருவரும் (இவ்வத்தியாயத்தில் இதன் பின்னர் குறித்துரைக்கப்பட்ட ஊழியர் எனக் குறிப்பிடு செய்யப்படும்) அத்தகைய தனியாளை அவர் அவரிடத்தில் தொழிலுக்கமர்த்தியுள்ளார் என 1995 திசெம்பர் 1 ஆம் திகதிக்குப் பிந்தாமல் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 112அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 112ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தில் 112அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :—

"தொழில்தருநரால் 1993 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு குறித்த சில ஊழியர்களின் வேதனத்திலிருந்து வரிகள் கழிப்பனவு செய்யப்படுவதற்கான சிறப்பேற்பாடுகள்.

112அ. (1) எவரேனும் குறித்துரைக்கப்பட்ட ஊழியரின் ஊழியத்திலிருந்து (32உஉ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கருத்தெல்லைக்குள்) 1993 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இயைபான இலாபங்களான ஊழியத்தின் அத்தகைய பாகத்தின் கூட்டுமொத்தத் தொகையானது ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரத்தை விஞ்சாதவிடத்து, அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய தொழில்தருநரால் அத்தகைய ஊழியரின் ஊதியத்தின் அத்தகைய பாகத்திலிருந்து கழிப்பனவு செய்யப்பட்டு ஆணையாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்ட வருமான வரியை அத்தகைய ஊழியருக்கு மீளளிப்பது அத்தகைய தொழில்தருநருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) தொழில்தருநர் ஒருவர் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் வருமானவரியை எவரேனும் ஊழியருக்கு மீளளிப்புச் செய்துள்ளவிடத்து அத்தகைய தொழில்தருநர் —

(அ) அவ்வாறு மீளளிப்புச் செய்யப்பட்ட தொகையை அல்லது அதன் எதேனும் பாகத்தை எதேனும் கொடுப்பனவுக் காலப்பகுதி தொடர்பில் அவரால் செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட எதேனும் அறவிடத்தகும் செலுத்துகைக்கு எதிராக எதிரீடு செய்வதற்கும் ; அத்துடன்

(ஆ) அது தொடர்பில் 1997 மார்ச் 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்து மூலமாக உரிமைக்

கோரிக்கையொன்று செய்யப்படுமானால், (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் எதிரீடு செய்யப்பட்ட பணத்தொகைகளின் மொத்தத்திற்கு மேலாக அவ்வாறு மீளளிப்புச் செய்யப்பட்ட தொகையின் மிகை ஏதுவுமிருப்பின் அதன் மீளளிப்பதற்கும் ;

உரித்துடையவராதல் வேண்டும்.

(3) ஆணையாளர் தலைமையதிபதி, (2) ஆம் உட்பிரிவின்கீழ் மீளளிப்புச் செய்யும் அல்லது எதிரீட்டை அனுமதிக்கும் நோக்கத்திற்கு (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அத்தகைய வருமான வரியின் மீளளிப்பிற்கான எண்பிப்பை முன்வைக்குமாறு அத்தகைய தொழில் தருநரைத் தேவைப்படுத்தலாம்.

(4) தொழில் தருநர் ஒருவர் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வருமானவரியை, அவரால் செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அடுத்துறும் செலுத்துகைக்கெதிராக (2)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் எதிரீடு செய்துள்ளவிடத்து, 107ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவினதும் 108 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகள் அவ்வாறு எதிரீடு செய்யப்பட்ட வரி தொடர்பில் அத்தகைய தொழில் தருநருக்கு ஏற்புடைத்தாதல் ஆகாது.

(5) குறித்துரைக்கப்பட்ட ஊழியர் ஒருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் மீளளிப்பொன்றைப் பெற்றுள்ளவிடத்து, அத்தகைய ஊழியர் :—

(அ) இவ்வத்தியாயத்தின்கீழ் கழிப்பனவு செய்யப்பட்டதும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு மீளளிப்புச் செய்யப்பட்டதுமான வருமான வரியின் தொகையின் (iii) ஆம் பிரிவின் கீழான எதிரீடு ஒன்றிற்கும், அல்லது

(ஆ) 149 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய தொகையின் மீளளிப்பொன்றுக்கும்

உரித்துடையவராதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 113க என்னும் பிரிவைத் திருத்துதல்.

.. முதன்மைச் சட்டவாக்கத்தில் 113க என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

"அத்தகைய தொழில்தருநரால் செலுத்தப்பட வேண்டும்" எனும் சொற்களுககுப பதிலாக "அததகைய தொழில்தருநரால் செலுததபபட வேண்டும் :

ஆயினும், எவ்வாறாயினும் 1994 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடக்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஊழியரின் அறிவிக்கை முறையான வேதனத்தின் கூட்டு மொத்தம் அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கு ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவை விஞ்சாதவிடத்து அத்தகைய ஊழியரின் அத்தகைய வேதனம் தொடர்பில் அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தொழில் தருநரால் வருமானவரி எதுவும் செலுத்தப்படற்பாலதாதல் ஆகாது அத்துடன் " என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "99 ஆம் பிரிவு, 102ஆம் பிரிவு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "99ஆம் பிரிவு, 100 ஆம் பிரிவு, 102 ஆம் பிரிவு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 113ண என்னும் பிரிவைத் திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113ண என்னும் பிரிவு இத்தால் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் —

(அ) "1994 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1994 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "ஆறாயிரம் ரூபாவின் விஞ்சுதொகையாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆறாயிரம் ரூபாவின் விஞ்சுதொகையாதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(இ) 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு —

(i) அத்தகைய ஊழியரின் அத்தகைய வேதனாதிகளிலிருந்து அறுபதினாயிரம் ரூபா பணத்தொகையொன்றை கழிப்பனவு செய்தபின்னர் அத்தகைய வேதனாதிகள்மீது இச் சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11ண என்னும் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட விதங்களின்படி கணக்கிடப்பட்ட வருமானவரியின் மேலான,

(ii) மூவாயிரம் ரூபாவின் விஞ்சுதொகையாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவு "தகைமையளிக்கும் பகிர்வு" என்பதன் வரைவிலக்கணத்தில் (ஆ) என்னும் பந்தியில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(i) அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு வரிவிதிக்கப்படற்பாலதாயில —

(அ) அவ்வகுப்பைச் சேர்ந்த கம்பனிகளுக்கு ஏற்புடைத்தான விதப்படி இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணை குறித்துரைக்கப்பட்டதோதான விதங்களில் வரிவிதிக்கப்படுமா, அல்லது

(ஆ) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் முதலீட்டுச் சபையால் ஆக்கப்பட்டதும், அத்தகைய சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ள ஏதேனும் கம்பனிக்கு ஏற்புடைத்தானதாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான ஏதேனும் ஒழுங்குவிதியில்

குறித்துரைக்கப்பட்ட தோதான விதப்படி வரிவிதிக்கப்படுமோ ;".

(2) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "பிரிவு 32ஏ அல்லது பிரிவு 32ஓ" என்னும் இலக்கங்களுக்கும் சொற்களுக்கும் பதிலாக, "பிரிவு ஏ அல்லது பிரிவு 32ஓ அல்லது பிரிவு 32க" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(3) அப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில் "(i) அவ்வுட்பந்தியின் (iii) ஆம் இனத்தில் "அல்லது வருமானத்திலிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அல்லது வருமானத்திலிருந்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் (ii) அவ்வுட்பந்தியின் (iii) ஆம் இனத்தை உடனடுத்துப் பின்வரும் இனத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(iv) எந்த இலாபங்களினதும் வருமானத்தினதும் மீது 93 (1) ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் செலுத்தப்பட்டுள்ளதான வரி, அத்தகைய இலாபங்களினதும் வருமானத்தினதும் மீது இலங்கைக்கு வெளியே செலுத்தப்பட்ட ஏதேனும் வரிக்கு 92 ஆம் பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வரி வாரின் தொகையை விஞ்சமாட்டாதோ அந்த இலாபங்களினதும் வருமானத்திலிருந்து.".

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஏழாம் அட்டவணையை மாற்றீடு செய்தல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஏழாம் அட்டவணை இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக இத்தால் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது :—

"ஏழாம் அட்டவணை (பிரிவு 33அ (1)

1988 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 1992 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டிற்கும் முற்பணக் கம்பனியின் வரிவீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :—

(i) சிறிய கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின் மீது

25 சதவீதம்

(ii) விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றினால் அல்லது மக்கள் கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின்மீது

33 1/3 சதவீதம்

(iii) சிறிய கம்பனியொன்றோ அல்லது விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றோ அல்லது மக்கள் கம்பனியொன்றோ அல்லாத கூறு நம்பிக்கைபொறுப்பு ஒன்றினால் அல்லது பரஸ்பர நிதியத்தினால் அல்லது கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின்மீது 50 சதவீதம்

1992 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கான முற்பணக் கம்பனி வரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :—

(i) சிறிய கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றிற்கும் சமமான தொகைமீது 25 சதவீதம்

(ii) விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றினால் அல்லது மக்கள் கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றிற்கும் சமமான தொகையின் மீது

33 1/3 சதவீதம்

(iii) சிறிய கம்பனியொன்றோ அல்லது விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றோ அல்லது மக்கள் கம்பனியொன்றோ அல்லாத கூறு நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றினால் அல்லது பரஸ்பர நிதியத்தால் அல்லது கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது 60 சதவீதம்

1993 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டுக்கு முற்பணக் கம்பனி வரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :—

(i) சிறிய கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின் மீது 25 சதவீதம்

(ii) சிறிய கம்பனியொன்றல்லாத கூறு நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றி னால், பரஸ்பர நிதியத்தால் அல்லது கம்பனியால் செய்யப் பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக் குச் சமமான தொகையின் மீது 33 1/3 சதவீதம்.

1994 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும் முற்பணக் கம்பனி வரிவீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :—

(i) கூறு நம்பிக்கைப்பொறுப்பு ஒன்றினால் அல்லது பரஸ்பர நிதி யத்தால் அல்லது வேறு ஏதேனும் கம்பனியால் பிரிவு 32எ பிரிவு 32ஊ, பிரிவு 32ஓ அல்லது பிரிவு32க என்பதன் ஏற்பாடுகளுக் கிணங்க வரியிறுக்கப்பட்ட இலாபங்கள் தவிர்ந்த இலாபங்களி லிருந்து செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன் றினதும் தொகைக்குச் சமமான தொகையின் மீது
27 சதவீதம்

(ii) பிரிவு 32எ அல்லது பிரிவு 32ஓ அல்லது பிரிவு 32க என்பதன் ஏற் பாடுகளுக்கிணங்க வரியிறுக்கப்பட்ட இலாபங்களிலிருந்து கம் பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ் வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின்மீது
8 சதவீதம்

(iii) பிரிவு 32ஊ என்பதன் ஏற்பாடுகளுக்கிணங்க வரியிறுக்கப்பட்ட இலாபங்களிலிருந்து கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின்மீது 5 சதவீதம்".

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 32உ, பிரிவு 32க, பிரிவு 33அ என்பவற்றிற்குச் செய்யப்பட்ட திருத்தங்களும் முறையே இச்சட் டத்தின் 10 ஆம், 12 ஆம், 13 ஆம் அத்துடன் 21 ஆம் பிரிவுகளால் முதன் மைச் சட்டவாக்கத்திற்கான ஏழாம் அட்டவணைக்குச் செய்யப்பட்ட மாற்றீடும் எல்லா நோக்கங்களுக்காகவும் 1994 ஒக்ரோபர் 31 ஆம் திகதி யன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

23 தொழில்தருநர் ஒருவர் 1994 மே 18 ஆம் திகதி தொடங்குவதும் இச்சட்டம் தொடங்கும் திகதியன்று முடிவடைவதுமான காலப்பகுதி யில் ஏதேனும் காலப்பகுதியில் செலுத்தப்பட்ட ஏதேனும் வருமானவரி தொடர்பில் அத்தகைய வரியை 112அ என்னும் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின்கீழ் மீளளிப்புச் செய்துள்ளவிடத்து அல்லது 112அ என்னும் பிரிவில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் எதிரீடு செய்துள்ளவிடத்து அத்தகைய தொழில்தருநர் — மீளளிப்பு அல்லது எதிரீடு செல்லுபடியாக்கப் படுதல்.

(அ) அவ்வாறு மீளளிக்கப்பட்ட அல்லது எதிரீடு செய்யப்பட்ட அத்தகைய வரியை விடயத்திற்கேற்ப செல்லுபடியான விதத்தில் மீளளிப்புச் செய்துள்ளார் அல்லது எதிரீடு செய்துள்ளார் எனவும், அத்துடன்

(ஆ) நூற்றியேழாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் அவ்வாறு எதிரீடு செய்யப்பட்ட அத்தகைய வரித்தொடர்பில் தவறாளர் ஒருவரல்லர் எனவும்

கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

24. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,859 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல. 32 டிரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.